# பத்திரிக்கை செய்தி

## குற்ற வழக்கிலிருந்து விடுவிப்பதற்காக லஞ்சம் கேட்டு பெற்ற வழக்கில் முன்னாள் காவல் ஆய்வாளர் அவர்களுக்கு தண்டனை விதித்து தீர்ப்பு

புகார்தாரர் கடந்த 2017ம் வருடம், தனது மகன் திரு.ஸ்ரீஷர்வேஷ் என்பவருடன் ஈரோடு மாவட்டத்தில் வசித்து வந்தார். திரு.விவேகானந்தன், முன்னாள் காவல் ஆய்வாளர், நம்பியூர் காவல் நிலையம், ஈரோடு மாவட்டம் அவர்கள் புகார்தாரரின் மகனின் பெயரை வழக்கிலிருந்து நீக்கம் செய்வதற்காக தனக்கு ரூ.50,000/- லஞ்சமாக கொடுக்க வேண்டுமென கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் கொடுத்த புகாரின் அடிப்படையில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, ஈரோடு பிரிவில் வழக்குபதிவு செய்யப்பட்டு 18.05.2017 தேதியன்று பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது, பொறிவைப்பு நடவடிக்கையில் திரு.விவேகானந்தன், முன்னாள் காவல் ஆய்வாளர், புகார்தாரரிடம் லஞ்சப்பணம் ரூ.50,000/-யை கேட்டு பெற்றுக்கொண்ட போது கைது செய்யப்பட்டார். இந்த வழக்கில் விசாரணை முடிவுற்று எதிரி மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு ஈரோடு சிறப்பு நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடத்தப்பட்டு இன்று 28.08.2023 எதிரி திரு.விவேகானந்தன், முன்னாள் காவல் ஆய்வாளர், சட்டப்பிரிவு 7of PC Act-ன் 1988 மற்றும் சட்டப்பிரிவு 13(2) & 13(1) (d) of PC Act-ன் கீழ் 4 வருட கடுங்காவல் தண்டனையுடன் ரூ.1,00,000/- அபராதமும் விதித்து தண்டணையையும் வழங்கி தீர்ப்பு வழங்கப்பட்டது.

Scanned with OKEN Scanner